பலநோக்கு சுகாதாரத் திட்டம்.

*வினா எண் 500—திரு. கு. ரமணி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பலநோக்கு சுகாதாரத் திட்டத்தை அமுல் நடத்துவதற்கு மத்திய அரசு மானியம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் 1979–80-க்கு கிடைத்த மானியம் எவ்வளவு?

(இ) 1980–81-க்கு எவ்வளவு கிடைக்கும் ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) ஆம்.

(ஆ) ரூ. 23.245 இலட்சம்.

(இ) ரூ. 33 இலட்சம் வரை.

திரு. கு. ரமணி: தலைவரவர்களே, இந்த பலநோக்கு சுகாதார நிலையத்தில் என்னென்ன பணிகள் செய்யப்படுகின்றன? தற்போது இருக்கின்ற ஆரம்பச் சுகாதார நிலயம் செய்கின்ற பணியை விட வேறு என்னென்ன அதிகப்படியானப் பணிகளை இவை செய்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவரவர்களே, மத்திய அரசு மல்டி பர்பஸ் ஹெல்த் ஒர்க்கர்ஸ் ஸ்கீம் என்று ஒரு பெயர் கொடுத்து அதற்காகச் சிலரைத் தயார் செய்து அவர்களுக்குப் பயிற்சி கொடுத்து, ஆன்டி நேட்டல் அன்ட் போஸ்ட் நேட்டல் என்று அதாவது குழந்தை பிறப்பதற்கு முன்பும், குழந்தை பிறந்ததற்குப் பிறகும் அதற்கான வசதிகள் எப்படி எப்படி இருக்க வேண்டும் என்றும், என்னென்ன சாப்பாடு சாப்பிட வேண்டும், எந்தெந்த நிலையிலே தங்களை வைத்துக் கொள்ள வேண்டும் என்றெல்லாம் அவர்களுக்கு விளக்குவதற்காக அந்த ஸ்கீமை ஏற்படுத்தி இருக்கிறார்கள். ஆகவே அவர்களுடைய வீட்டுக்குச் சென்று அவர்களுக்கு என்னென்ன நோய் இருக்கின்றது என்பதைக்கண்டுபிடித்து உடனடியாக டாக்டருக்குச் சொல்கின்ற வகையில் ஆரம்பச் சுகாதார நிலையத்திலே இருக்கின்ற மருத்துவர்களுக்கும் கிராமங்களில் வாழக் கூடிய மக்களுக்கும் இடையிலே ஒரு பாலமாக இந்த ஒர்க்கர்ஸ் பணி புரிவார்கள்.

1981 மார்ச் 26]

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, இந்த பல நோக்கு சென்டரிலே பயன்படுத்தப்படுவதற்கான மருந்துகள் வெளி நாடுகளில் இருந்து நமக்கு நன்கொடையாகத் தரப்பட்டும் அப்படிப் பட்ட மருந்துகள் பயன்படுத்தப்படாமல் பல இடங்களிலே இருந்து வருகின்றன. அவற்றை உபயோகத்திற்குக் கொண்டு வராமல் இருக்கின்றது என்ற புகார்கள் அரசுக்கு வந்துள்ளது. அப்படியானால் அதை முறையாகப் பயன்படுத்துவதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறார்கள் ?

மாண்புமிகு டாக்டர் திரு. எச்.வி. ஹண்டே : தலைவரவர்களே, அங்கே மருந்துகள் தரப்படவில்லை. கிட் என்பது ஒரு பை மாதிரியாக இருக்கும். அதுதான் கொடுக்கப்பட்டிருக்கின்றது. 5 மாவட்டங்களில் இந்தத் திட்டத்தை அமல்படுத்தி இருக்கிறோம். அங்கே மட்டும்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. மற்ற எல்லா மாவட்டங்களிலும் இதை நிறைவேற்றுவதற்குத் திட்டம் தீட்டி இருக்கிறோம். ஆகவே எல்லா மாவட்டங்களிலும் விரைவில் செய்ய இருக்கிறோம். அப்போது இந்த கிட் அவர்களுக்கும் கொடுக்கப்படும்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : தலைவரவர்களே, 5 மாவட்டங்களிலே மட்டும் அமலுக்குக் கொண்டு வந்து இருப்பதாக அமைச்சரவர்கள் கூறினார்கள். அந்த மாவட்டங்கள் எவை எவை ? இனி அடுத்து இத்திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளப்படும் மாவட்டங்கள் எவை எவை ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவரவர்களே, அந்த ஐந்து மாவட்டங்கள், குமரி மாவட்டம், மதுரை மாவட்டம், தென்னாற்காடு மாவட்டம், செங்கை மாவட்டம், சேலம் மாவட்டம் ஆகியவை.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவரவர்களே, இந்தத் திட்டத்தை தாலுக்கா மருத்துவமனைகளில் செயல்படுத்துகிறார்களா அல்லது தனியாகச் செயல்படுத்தப்படுகிறதா அல்லது ஆரம்பச் சுகாதார நிலையத்தின் மூலமாகச் செயல்படுத்தப் படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவரவர்களே, நான் ஏற்கனவே சொன்ன மாதிரி தாலுக்கா ஹெட்குவார்ட்டர்ஸ் மருத்துவமனைக்கும் இந்தத் திட்டத்திற்கும் சம்பந்தம் கிடையாது. ஆரம்ப சுகாதார நிலையம் இருக்கின்ற ஒன்றியத்தின் எல்லைக்குள்ளே இலட்சம் பேர்கள் இருக்கிறார்கள் என்று வைத்துக்கொண்டால் ஆரம்பச் சுகாதார நிலையத்திற்கும், அங்குள்ள மக்களுக்கும் தொடர்பு ஏற்படுத்துவதுதான் இந்த மல்டி பர்ப்பஸ் ஹெல்த் சென்டர்ஸ் என்ற திட்டத்தின் நோக்கமாகும்.